# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 14.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனையை தீர்க்கவும், குடிநீர் மற்றும் பாசனத் தேவைகளுக்கு தண்ணீர் பெறுவதற்காகவும், கர்நாடகத்தின் நந்தி துர்கம் பகுதியில் உற்பத்தியாகும் பாலாறு மற்றும் தென்பெண்ணையாறு இணைப்புத் திட்டத்திற்கும் மத்திய நீர்வள ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.
    - தமிழ் நாட்டில் தாமிரபரணி – கருமேனியாறு நம்பியாறு நதிகள் இணைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இந்தியாவின் மிகப் பெரிய பொதுத்துறை போக்குவரத்து நிறுவனமான இரயில்வேயின் வரலாற்றை அனைவருக்கும் தெரிவிக்கும் நோக்கில் 72வது சுதந்திர தினம் (ஆகஸ்ட் 15) முதல், கோவை, ஈரோடு, டெல்லி உள்பட 22 இரயில் நிலையங்களில் டிஜிட்டல் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- முதன் முறையாக இந்தியாவில் மூன்று நீர் விமான தளங்களை (water Aerodromes) நிறுவ மத்திய விமானத்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- **அமைய உள்ள இடங்கள்**
    - சிலிக்கா ஏரி – ஒடிசா
    - சர்தார் சரோவர் அணை – குஜராத்
    - சமர்மதி ஆறு – குஜராத்

- இந்தியாவில் மக்கள் வாழ்வதற்கு உகந்த நகரங்களின் பட்டியலை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற அமைச்சகமானது வெளியிட்டுள்ளது.
  - பொருளாதாரம், சமூகம், உள்கட்டமைப்பு, ஆட்சிமுறை போன்ற நான்கு காரணிகளை அளவுகோலாகக் கொண்ட இந்தப் பட்டியலில் மாகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நகரங்கள் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளது.
  - புனே முதலிடத்தையும், நவி மும்பை 2வது இடத்தையும், கிரேட்டர் மும்பை 3வது இடத்தையும் பிடித்துள்ளது.
  - தமிழகத்தைப் பொறுத்தவரை சென்னை நகரமானது 14வது இடத்தில் உள்ளது.

- காகத்யா என்ற திட்டத்தின் தாக்கம் குறித்து ஆராய்வை மேற்கொள்ள தெலுங்கானா மாநிலம் மித வெப்ப மண்டல பகுதிகளுக்கான சர்வதேச ஆராய்ச்சி பயிர்கள் நிறுவனத்துடன் (ICRISAT – International Crops Research Institute for the Semi – Arid Tropics) புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- **குறிப்பு:**
  - காகத்யா திட்டம் என்பது தெலுங்கானா மாநிலத்தில் உள்ள அனைத்து சிறு பாசன தொட்டிகள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை மறுசீரமைப்புச் செய்யும் திட்டமாகும்.

- சட்டத்துறை நடவடிக்கைகளில் ஒழுக்கம், அமைதி, உண்மை, அன்பு மற்றும் அகிம்சை உள்ளிட்ட மனித மதிப்பீடுகளை ஒருங்கிணைக்க, “மனித மதிப்பீடகளும் சட்டத்துறையும்” (Human values and Legal world) என்ற பெயரிலான தலைமையில் ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் நடைபெற்றுள்ளது.
  - சர்வதேச நீதிமன்ற நீதிபதி தல்வீர் பண்டாசி முன்னிலை வகித்தார்.

- சமையில் எண்ணெயை சேரித்தல் அதனை பயோடீசலாக மாற்றும், RUCO (Repurpose Used Cooking Oil) (பயன்படுத்திய சமையல் எண்ணெய்) என்னும் முன்மாதிரி திட்டத்தை உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI – Food Safety and Standards Authority of India) துவக்கியுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- 2018ம் ஆண்டிற்கான நேபாள - இந்தியா இலக்கிய திருவிழா (Nepal – India Literature Festival - 2018) நேபாள் நாட்டின் ‘பிர்குன்ஜ்’ நகரில் நடைபெறவுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

- நைஜீரியா ஓபன் டேபிள் டென்னிஸ் சாலஞ்சர் தொடரில் சீனாவின் ஷாவாபோ வாங் இந்தியாவின் ரோனித் பன்ஜாவை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றுள்ளது.
  - இந்தியா-வின் ரோனித் பன்ஜா இப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

## நியமனங்கள்

- மின்சார மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (Appellate Tribunal for Electricity) தலைவராக நீதிபதி மஞ்சுளா செல்லூர் நியமிக்கப்பட்டுள்ளார்.